22.04.2025 CC 40/2018 PW1. ஞானமுத்து

கடந்த 08.11.2018ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருந்த நிலையில் இந்நீதிமன்ற Crl.M.P.1621/2018, dated 05.12.2018ன் படி கு.வி.மு.ச 1973பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

<u>குற்றம் சுமத்தப்பட்டவர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்</u>

1. நான் நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்த சங்கதிகளை தான் போலிசார் விசாரணையில் கூறினேன் என்றால், நான் எனது முகவரியை மட்டும் தான் கூறினேன். சம்பவயிடமான பத்தரை என்ற ஊரிலிருந்து நான் வசிக்கும் பணவிளை எவ்வளவு தூரம் இருக்கும் என்றால், சுமார் 2கி.மீ. தூரம் இருக்கும்.

2. ரவி, ராஜன் மற்றும் இரு நபர்கள் மீது 307 இ.த.ச பிரிவின் கீழ் குளச்சல் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்ட விவரம் எனக்குத் தெரியுமா என்றால், தெரியாது. அந்த வழக்கில் தண்டனை பெற்ற ரவி, ராஜன் மற்றும் இரு நபர்களுக்கு நான் ஜாமீன் வழங்கினேனா என்றால், சரிதான். ஆனால் அது எந்த வழக்கு என்று தெரியாது. ராஜன் ஜாமீன் கேட்டதால் நான் கொடுத்தேன்.

3. குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது ஏற்கனவே குளச்சல் காவல்நிலையத்தில் குற்ற எண் 606/1997 என்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு அதில் நான் பொய் சாட்சியம் அளித்து நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டது என்றால், சரியல்ல. மேற்படி சங்கதிகளை நான் பொய்யாக கூறுகிறேன் என்றால், சரியல்ல.

4. நான் வாழை நடும் வேலை செய்து வருகிறேன் என்றால், சரிதான். காயம்பட்ட நபர் என்னுடைய உறவினர் என்பதால் நான் பொய்சாட்சியாக இவ்வழக்கில் சேர்க்கப்பட்டு பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
இரணியல்.